ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

नाधीता श्रुतयो न च स्मृतिचयाः पौराणवाणी तथा
नो दृष्टा विधिवच्च धर्मनिकरो नानुष्ठितस्सादरम् ।
नो जप्ताः प्रियहेतवस्तव शिवे पञ्चाक्षराद्या जपाः
भक्त्या त्वत्पदजातया परमहं काङ्क्षे तवानुग्रहम् ॥

நாதீதா ச்ருதயோ ந ச ஸ்ம்ருதிசயா: பௌராணவாணீ [ததா
நோ த்ருஷ்டா விதிவச்ச தர்மநிகரோ நாநுஷ்டிதஸ்ஸாதரம் ।
நோ ஜப்தா: ப்ரியஹேதவஸ்தவ ஸிவே பஞ்சாக்ஷராத்யா ஜபா:
பக்த்யா த்வத்பதஜாதயா பரமஹம் காங்க்ஷே தவாநுக்ரஹம் ॥

ஹே ஸிவே ! ஹே பரமேசுவரி உன்னுடைய பிரீதியை அடைவதற்குக் காரணமான வேதங்கள் என்னால் அத்தியயனம் செய்யப்படவில்லை. அதற்கு அடுத்தபடியாக விளங்கும் ஸ்மிருதிகளும் என்னால் கற்கப்படவில்லை. அதற்கடுத்துள்ள புராணங்களும் என்னால் பார்க்கப்படவில்லை என்னுடையவர்ணாச்ரமங்களுக்குற்ற தர்மங்களும்பக்தி சிரத்தையுடன் விதிப்படி என்னால் அனுஷ்டிக்கப்படவில்லை. பஞ்சாக்ஷரம் முதலான சிறந்த ஜபங்களும் என்னால் ஜபிக்கப்படவில்லை. இவ்விதமிருந்தாலும் உன்னுடைய சரணாரவிந்தங்களிலேற்பட்ட பக்தி ஒன்றைக்கொண்டு மாத்திரம் உனனுடைய அனுக்கிரஹத்தை நான் இச்சிக்கிறேன்.

ஸகல ஜகத்திற்கும் மாதாவாகவும் கருணாநிதியாகவும் விளங்கும் ஹே பார்வதீ தேவியே ! உன்னுடைய உத்தமமான அனுச்கிரகத்தைப் பெறுவதற்கு வேதம் முதலிய சாஸ்திரங்களில் பல ஸாதனங்கள் கூறப்பட்டிருந்தாலும் அவைகளை விதி தவறாமல் ஸரியாயனுஷ்டிப்பதற்குத் தற்காலத்தில அனேக கஷ்டங்களிலிருப்பதால் அவைகளை அனுஷ்டிக்கச் சக்தியற்றவனாய்க் கொண்டு

मोक्षसाधनसामग्र्यां भक्तिरेव गरीयसी ।

மோக்ஷஸாதந ஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ ।

மோக்ஷத்திற்கு ஸாதனங்களாயுள்ள மார்க்கங்களில் பக்திதான் சிறந்தது. என்று ஸ்ரீமத்பாகவதத்திலும் மிகவும் சிறந்த பக்தியால் நான் அடையத்தகுந்தவன் என்று ஸ்ரீகீதாசாஸ்திரத்திலும் கூறியதற்கிணங்க உன்னுடைய சரணங்களில் அற்பம் பக்தி எனக்கேற்பட்டிருக்கின்றது. இந்த ஸாதனத்தைக் கொண்டு உன் அனுக்கிரகத்தை அடைய நான் விரும்புகிறபடியால் அவ்விதமே நீ எனக்குக் கிருபைசெய்ய வேண்டுமென்று ஒரு பக்தர் வேண்டுகிறார். சுபம் !

உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

பிரபவ-ஹூ பங்குனி-மீ ௰௨

## சென்னையில் நடந்த வர்ணாச்ரம தர்ம மஹாநாட்டில் கொண்டுவந்த விஷயங்களில் எட்டு வயதிற்குமேல் செய்யும் கன்னிகாதானம் சாஸ்திரீயமா என்பதும் ஒன்று.

எட்டுவ்வயதிற்குமேல் செய்யும் கன்னிகாதானம் சாஸ்திரீயமா என்கிற இவ்வினாவில ஓர் சங்கை ஏற்படுகின்றது அதாவது சாஸ்திரஙகளில் கனனிகாதானத்திற்குற்ற காலத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள் அவைகளில ஒன்று மூக்யகாலம் மற்றொன்று கௌணகாலம் இவ்விரண்டிற்குள் எட்டுவயதிற்குமேல் செய்யும் கன்னிகாதானததை சாஸ்திரீய மூக்ய காலமாக அங்கீகரிக்கலாமா என்று கேழ்வையின் கருத்தா? அல்லது கௌணகாலமாக அஙகீகரிக்கலாமா எனபதா? முககிய காலமா என்று பிரச்னம் செய்தோரின் முக்கிய கருத்தாயிருந்தால் எட்டுவயதிற்குமேல் செய்யும் கன்னிகைகளின் தானமானது சாஸ்திரீயமான முக்கிய காலத்தில் செய்ததாககூறமுடியாதென்று தோன்றுகிறது ஏன் முடியாது, சாஸ்திரஙகளில சொல்லப்பட்ட முக்கியகாலம் எது என்றால் விசாரிப்போம்

சாஸ்திரங்களில் ஸ்திரீகளின் விவாகத்திற்குறிய காலத்தை இன்னசமயமென்று சாக்ஷாத்தாகக் குறிப்பிட்டு ஸம்வர்த்தர் ஒருவர் தான்சொல்லியிருக்கிறார் ஆனாலும்உபநயனத்திற்கு ஒருகாலத்தைக் குறிப்பிட்டுக் காட்டி அதையே இதற்கும் பலர் சொல்லியிருக்கிறார்கள் உபநயநத்திற்கு முககிய காலமாக:—

गर्भाष्टमे तु कुर्वीत ब्राह्मणस्योपनायनम् ।
गर्भादेकादशे राज्ञः गर्भात्तु द्वादशाद्विशः ॥ मनुः ।

கர்பாஷ்டமே து குர்வீத ப்ராஹ்மணஸ்யோபநாயநம்।
கர்பாதேகாதசே ராஜ்ஞ: கர்பாத்து த்வாதசாத்விச: ॥ மநு:॥

கர்ப்பத்திலிருக்கும் காலத்தையும் சேர்த்து எட்டாவது வயதில் பிராம்மணர்களுக்கு உபநயனமும், 11-வது வயதில் க்ஷத்திரியர்களுக்கும், 12வது வயதில் வைசியர்களுக்கும் மனு கூறியிருக்கிறார் அந்த அபிப்பிராயத்தையே गर्भाष्टमे ब्राह्मणमुपनीयेत என்பதாதி வாக்கியங்களால் ஆபஸ்தம்பரும் போதிக்கின்றார் இவ்விதமே இன்னும் பல ஸ்மிருதிகளும் உபநயன காலத்தைக் கூறுகின்றன பிறந்தது முதல் 8-வது வயதிலும் செய்யலாமென்றும் அதுவும் முக்கிய காலமென்றும் சிலர் சொல்லியிருக்கிறார்கள் இவ்விதம் உபநயனத்திற்குக் குறிப்பிட்ட இந்த காலத்தையே

विवाहं चोपनयनं स्त्रीणामाह पितामहः ।
तस्माद्गर्भाष्टमः श्रेष्ठः जन्मतो वाष्टवत्सरः ॥

விவாஹம்சோபநயநம் ஸ்த்ரீணாமாஹ பிதாமஹ: ।
தஸ்மாத்கர்பாஷ்டம: ச்ரேஷ்ட: ஜந்மதோவாஷ்டவத்ஸர: ॥

பிதாமகர் ஸ்திரீகளுக்கு விவாகமென்கிற ஸம்ஸ்காரத்தையே உபநயனமாகக் கருதுகிறார் ஆகையால் கர்ப்பகாலத்திலிருந்தும் எட்டாவது வயதிலாவது பிறந்து எட்டாவது வயதிலாவது ஸ்திரீகளுக்கு விவாஹத்தை நடத்த வேண்டும் அதுதான் முக்கியமான காலம் என்று இயமன் கூறியிருக்கிறார்

उपायनोदितः कालः स्त्रीणामुद्वाहकर्मणि ।
स्त्रीणामुपनयस्थाने विवाहं मनुरब्रवीत् ॥ व्याघ्रपादः ।

உபாயநோதித: கால: ஸ்த்ரீணாமுத்வாஹகர்மணி ।
ஸ்த்ரீணாமுபநயஸ்தாநே விவாஹம் மநுரப்ரவீத் ॥

புமான்களுக்குஉபநயனம் செய்வதற்குக்குறிப்பிட்டகாலத்தையே ஸ்திரீகளுடைய விவாஹத்திற்கும் எடுத்துக்கொள்ளவேண்டும் மனுவானவர் ஸ்திரீகளுக்கு விவாஹத்தையே உபநயனஸ்தானமாகச் சொல்லியிருக்கிறார் ஆகையால் உபநயனகாலமே விவாஹத்திற்கும் காலமென்று வியாக்ரபாதர் கருதுகின்றார் இவர்களின் அபிப்பிராயத்தையனுஸரித்தே

विवाहोह्यष्टवर्षायाः कन्यायास्तु प्रशस्यते । संवर्तः ।

விவாஹோஹ்யஷ்டவர்ஷாயா: கந்யாயாஸ்து ப்ரசஸ்யதே ।

ஸ்திரீகளுக்கு விவாகமென்பதை எட்டாவது வயதில் செய்வதுதான் முக்கிய காலமாகுமென்று ஸம்வர்த்தரும் சொல்லுகிறார்

இங்கு கூறப்பட்ட மஹரிஷிகளின்வசனார்த்தங்களைக் கவனித்தால் புமான்களுக்கு உபநயனத்திற்குகர்ப்பகாலம் முதலாவது ஜனித்த காலம்முதலாவதாஏற்படும்எட்டாவதுவருஷமேமுக்கியகாலமாகும்

(தொடரும்) உபபத்திராதிபர்

## விவாஹவயது மசோதா கண்டனக் கூட்டங்கள்.

### தில்லையாடியில்

1. ஸ்ரீ சரணாகதரக்ஷகசுவாமி கோவிலில் 23—2—28ல் பகல் இரண்டு மணிக்குமேல் ஒரு பொதுக்கூட்டம் கூடியது.

2. ஷை கோவில் டிரஸ்டி மகா-ள-ள-ஸ்ரீ T. A. இராமசுப்பிரமணி அய்யர் அவர்கள் மகாஜனங்களின் வேண்டுகோளின்படி அக்கிராஸனம் வகித்தார்.

3. கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் பிரசாரக வித்வான் பிர்மஸ்ரீ ஜகதீசசாஸ்திரிகள் வந்திருந்தார்கள் பிர்மஸ்ரீ வெங்கட்டராமசாஸ்திரியள், School Headmaster D. வெங்கட்டராமய்யர் ஷையூர் N வெங்கட்டருமய்யர் மிருசுதார். K. சுப்பிரமணி அய்யர் Merchant ஷையூர் T. R. சுந்தரேசய்யர் Landlord கி. நடேசய்யர் இன்னும் பலபேர்களும் வந்திருந்தார்கள். பிர்மஸ்ரீ ஜகதீசசாஸ்திரியள் பிரேரணையின்பேரில் அக்கிராஸனர் முகவுரையாகச் சில வார்த்தைகள் சொல்லிவிட்டு உள்ளூர் பிர்மஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரியள் அவர்களைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்.

4. பிர்மஸ்ரீ சாஸ்திரியளவர்கள் சொன்னதாவது சென்னை சட்ட சபையிலும், டில்லி சட்டசபையிலும் கொண்டுவந்திருக்கும் மசோதாக்களானது நமது இந்துமதத்திற்கும் ஸனாதன தர்மத்துக்கும், வேதப்பிரமாணத்துக்கும் அனுபவத்துக்கும் முற்றிலும் விரோதமாக இருப்பதுடன் மெம்பர்கள் எதிர்பார்க்கிறபடியாதொரு நன்மைகளும் எற்படாதென்றும், ஆனல் தீங்குகள் கண்டிப்பாய் உண்டாகிவிடுமென்றும் சொல்லிவிட்டு விவாஹமென்பது கேவலம், போகத்திற்காகமட்டும் ஏற்பட்ட ஸ்திரீபுருஷர்களின் ஒப்பந்தம் அல்லவென்றும் புருஷார்த்தங்களை அடைய தர்மங்களைச்செய்து அதன்மூலம் வேதப்பிரமாணமான ரணபந்தங்களைநிவர்த்திசெய்து, இகபர நன்மைகளை அடைய மற்ற மூன்று

ஆசிரமங்களைக்காட்டிலும் சுலபமான சாதனம் கிருஹஸ்தாசிரமம்
என்றும், விவாஹத்தில் கன்னிகாதானமாயிருக்கவேண்டியபடி-
யால் கன்னிகையின் வயது 8-முதல் 10-வயதுவரையில் முக்கிய
மானகாலமென்றும் 10-வயதுமுதல் 12-வயதுவரையில் கௌண
காலமென்றும் ஆகவே பத்துவயதுக்கு உள்ளேயே தங்கள்
பெண்களை விவாஹம் செய்துகொடுப்பது பெற்றவர்களின்
கடமை என்றும் சாஸ்திரம் முறையிடுகிறது. தவிரவும் கன்னிகா
தானம் என்பது நீண்டகாலம் அனுபோகத்தில் இருந்துவரு
கிறது. அதனால் நம் முன்னோர்களும் நம்முடைய தாயார்களும்
விசேஷ தீர்காயசும் தேகபலமும், புத்திபலமும் உள்ளவர்களா
கவே அனுபோகத்தில் தெரியவருகிறது. தற்காலம் காணப்படும்
பல குறைவுக்கு ஸ்திரீகள் வீட்டுவேலை செய்கிறதில்லை. பலமும்
போய்விட்டது: குழைந்தைகளுக்குத் தாய்பால் இல்லை. விபரீத
ஆஹாரங்களைக்கொடுப்பதுதான் காரணமாகிறது.

ஆகையால் முத்துலக்ஷ்மியம்மாள் சொல்லுகிறபடிக்கும்
டாக்டர் ஹரவிலாஸ் ஸாரதா சொல்லுகிறபடிக்கும் குழந்தைக
ளின் பலக்குறைவுக்குக் காரணம் சிறுவயது கல்லியாணம் ஆகமா
ட்டாது; இன்னும் பல யுக்திகளாலும் விவாஹவயதுமசோதா
கண்டிக்கத்தகுந்ததென்று ஒரு முகூர்த்தகாலம் மிகவும் அழகாயுப
ன்னியாசம் செய்தார். மற்ற உள்ளூர்பிரமுகர்களும் ஷை மசோ
தாக்கள் நம்முடைய இந்துமதத்தையே வேறுடன் அழிப்பது
டன் பல வழியிலும் தீங்குகள் உண்டாகக்கூடியதாக இருக்கிற
படியால் ஷை மசோதாக்களை ரத்துசெய்யவேண்டியது அவசிய
மென்று கண்டித்துப்பேசினார்கள். மீடிங்குக்கு வந்திருந்த எல்
லா ஜனங்களும் ஏகோபித்து மசோதா கண்டனத் தீர்மானங்களை
நிறைவேற்றி ஷை தீர்மானங்களை கனம் கவர்னருக்கும் கனம்கவ
ர்னஜெனரல் துறை அவர்களுக்கும் அனுப்பும்படி அக்கிராஸனர்
அவர்களையும் கேட்டுக்கொண்டு அதிகாரம் கொடுத்தார்கள்
அக்கிராஸனர் அவர்கள் பின்னுரையாக ஸ்ரீ சங்கராசாரியார்
அனுக்கிரகத்தாலும் நமது குலதெய்வமான ஸ்ரீ பிருகன்னாயகி
கிருபையாலும் நமது தீர்மானங்கள் உறுதியாக வெற்றியடையு
மென்றும் ஆசாரியார், கவர்ன்மெண்டார்சபை ஸநாதனதர்மம்
ஸபையோர்கள் யாவருக்கும் வாழுத்து கூறிக் கரகோஷத்துடன்
கூட்டம்கலைந்தது. சுபம். T. A. ராமசுப்பிரமணியய்யர்,

பிரஸிடெண்ட்.

## கல்லிடைக்குறிச்சி.

ஷை கல்லிடைக்குறிச்சி கிராமம் லக்ஷ்மீபதிஸ்வாமிகோவி லில் ஷையூர் ஸம்ஸ்கிருத காலேஜ் S. V. S. ஸபையின் ஆதர வில் மாலை 4½-மணிக்கு டாக்டர் முத்துலெக்ஷ்மியின் 'விவாகவ யது மசோதா வின் கண்டனக் கூட்டமொன்று நடைபெற்றது. அச்சமயம் இவ்வூருக்குத் தற்காலம் விஜயம் செய்திருப்பவர்களும், ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யாதி பிருதங்களை வகிப்பவர்க ளும் ஹரிஹரபுரமடாதிபதிகளுமாகிய ஆசார்ய ஸ்ரீ ஸ்வயம்பிர காசராமானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் ஒரு சிறந்த பண்டிதரின் பிரார்த்தனைக்கிணங்கி அக்கிராசன பதவியை அங்கீகரித்தனர்.

T. K. ராமபத்ரசர்மா அவர்கள் டாக்டர் முத்துலக்ஷ்மியின் மசோதாவை நன்ருய் சபையினேர்க்கு எடுத்துச் சொல்லி, 12-தீர்மானங்களால் கண்டித்தார். அத்தீர்ம்மானங்களை ஸபையி னர் ஏகமனதாய் அங்கீகரித்தனர். முடிவுரை அக்கிராஸனுதிபதி அவர்கள் பல மேற்கோளுடன் ஹிந்து ஆசாரங்களின் மேன்மை யை பற்றி விரிவாய் எடுத்துரைத்தார்கள் வந்தனேபசாரத்துடன் ஸபை கலைந்தது. காரியதரிசி

## தேவகோட்டை.

18—2—28 மாலை 5-மணிக்கு ராமநாதபுரம் ஜில்லா தேவக் கோட்டையில் ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு சங்கரா சாரியஸ்வாமிகளவர்கள் அனுக்கிரஹத்தை முன்னிட்டு துவாதசி மடத்தில் இந்து மஹாஜனங்கள் கூடிய ஸபையில் பிரம்மஸ்ரீ ஹை கோர்ட்டு வக்கீல் ஆர். கணபதிஅய்யாவர்கள் அக்ராசனபதத்தி லிருந்து ஆலோசனை செய்த தீர்மானம் பின்வருமாறு.

இந்தியா சட்டஸபையில் ஸ்ரீ ஹரவிலாஸ்சாரதா அவர்களா லும் சென்னை சட்டசபையில் முத்துலக்ஷ்மியம்மாளால் இந்துப் பெண்பிள்ளைகள் இந்து ஆண்பிள்ளைகளுக்கு விவாகம் செய்ய வேண்டிய வயதைக் குறித்துக்கொண்டுவரப்பட்டிருக்கும் பால்ய விவாக மசோதாவானது இந்து தர்மசாஸ்திர நிபந்தனைக்கு நேர் விரோதமாயும் இந்துக்கள் மதாசார சிஷ்டாசாரங்களுக்கும் பிரா சீன வழக்கங்களுக்கும் விரோதமாயுமிருக்கின்றதும்தவிர இந்துக் களுடைய சௌகரியமான குடும்ப ஏற்பாட்டிற்குறிய சுதந்திரங் களுக்குக் கடூரமாயும் அவிவேகமாயும் அனுவசியமாயுமுள்ள நிர் பந்தங்களைச் செய்கிறதும் முக்கியமாய் 1858-ல்மாக்ஷிமை தங்கிய

விக்டோரியா மஹாராணி அவர்களால் இந்து ஜனங்களுடைய மதாசார சிஷ்டாசாரங்களில் பிரவர்த்திக்கிறதில்லையென்று கூறப்பட்ட பவித்ரமான உறுதிமொழிகளுக்கு விரோதமாயுமிருக்கின்றது என்று தீர்மானஞ்செய்து ஷ மசோதாவைக்கண்டனம் செய்யப்பட்டது. ஹைகோர்ட் வக்கீல் மகா-ா-ஸ்ரீ S. சுப்பிரமணிய அய்யரவர்களால் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டது. வக்கீல் நாகரத்தினமய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டது. மற்றும் ஸபையிலுள்ள பல பெரியோர்களாலும் நன்ருய் உபன்னியஸிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

அசேஷ மஹாஜனங்கள்.

## மன்னார்குடி.

மன்னார்குடி வக்கீல்குமாஸ்தாக்கள் அஸோஸியேஷனில் 1928-ஸு பிப்ரவரி-ஸ்ரீ 11உயில் கூடிய மீடிங்கில் டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளால் கொண்டுவரப்பட்டிருக்கும் விவாஹவயது மசோதாவைச் சட்டமாக்கும் விஷயத்தில் ஹிந்துஜனசமூகத்துக்கு ஏற்படும் அஸௌகரியங்களையும் பூர்வீக தர்மசாஸ்திரஅனுஷ்டானங்களுக்கு விரோதமேற்படக் கூடியதையும் விஸ்திரித்து ஷ மசோதாகண்டன விஷயமாய் ஷ அஸோஸியேஷன் மெம்பர்களில் ஒருவருன பிரம்மஸ்ரீ ருஜகோபாலய்யர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பிரேரணை எல்லாமெம்பர்களாலும் ஏகோபித்து ஆமோதிக்கப்பட்டுத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது விஷயமாக சென்னை மாகாண கவர்னர்துரை அவர்களுக்கும் இந்தியா ராஜப்ரதிநிதி அவர்களுக்கும் மிமோரியில் அனுப்பப்பட்டிருக்கிறது;

வி. சுப்ரமணியன்

## விழுப்புரம்

அனுமார்கோவில் அக்ரஹாரம் ஸ்ரீ பாபுருவ் அவர்கள் சத்திரத்தில் ஸ்ரீமான் வக்கீல் M S வெங்கட்ருமஅய்யர் அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் இந்துமஹாஜனங்கள் பொதுக்கூட்டமொன்று 26-2-28 ல்மாலை $3\frac{1}{2}$-மணிக்கு நடைபெற்றது.

ஸ்ரீமதி முத்துலெக்ஷ்மிரெட்டியார் சென்னை சட்டசபையில் கொண்டுவந்திருப்பதையும் Mr. ஹரவிலாஸ்சாரதாடில்லிசட்டசபையில் கொண்டுவந்திருக்கும் விவாஹவயதுமசோதா சட்டமானல் ஏற்படும் கஷ்டங்களும் இந்துமத கோட்பாட்டிற்கும் அனுபவ அனுஷ்டானத்திற்கும் முற்றிலும் சரியானதல்ல என்ற விஷயங்

களைவிஸ்தாரமாய் வேதமூர்த்தி D V ராமனுத சாஸ்திரிகள் ஹைஸ் கூல் சம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸதாதாசாரியார் கவர்ண்மெண்ட்போதனு முறை பாடசாலை உபாத்தியாயர், கீதை உபன்யாசகர் ஸ்ரீமான் சுந்தரேசசாஸ்திரிகள் இவர்கள் சபையோருக்கு அதன் கஷ்டநஷ்டங்களை விஸ்தாரமாய் எடுத்துரைத்தபின்னர் ஸ்ரீமான் V A சுப்பிரமணிய அய்யர் அவர்களால் "ஷை இரண்டு சட்டசபைகளிலும் ஷை மசோதாக்கள் சட்டமாகக்கூடாதென்றும் அதை இந்தப்பொதுஜனக்கூட்டம் கண்டிக்கிறதென்றும் தீர்மானத்தை பிரேரேபிக்கப்பட்டு பாகவதர் கோவிந்தாசாரியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டும், P K குபேரசெட்டியார் அவர்களால் ஆதரிக்கப்பட்டும் எல்லோராலும்ஏகோபித்துத்தீர்மானிக்கப்பட்டது,

ஷை தீர்மானங்களின் கட்சிகளை சென்னை கவர்னர் அவர்களுக்கும் வைசிராய் அவர்களுக்கும் மஹாஜர் நாமாவுடன் அனுப்பி வைக்கவேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அக்கிராஸனர் அவர்களின் பின்னுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

V ஜானகிராமன்.

---

## ஸ்திரீகள் மகாநாடு.

இத்தலையங்கம் பூட்டி 10-2-28 வெள்ளிக்கிழமை மித்திரனில் பத்திராதிபர் கலத்தில் இவ்விஷயம் வரையப்பட்டிருக்கிறது இதிற் சற்றிறங்குவாம்.

" தன்கையே தனக்குதவி " என்பதை நமது இந்திய சகோதரிகள் தெரிந்துகொண்டுவிட்டார்கள், சென்ற சில வருஷங்களாக அவர்கள் செய்துவரும் அறிய முயற்சியின் பலனாக ஸ்திரீகளிடையே புதியதோர் உணர்ச்சி எற்பட்டிருக்கிறது. சீதை தமயந்தி, ஸாவித்ரிபோன்ற உத்தமிகள் உற்பவித்த இத்தேசத்தில் பிறந்த தாங்களும் அவர்களைப்போல் மேன்மையை அடைவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று இவ்வாறு எழுதிக்கொண்டுபோகிறது. இவ்விதம் எவ்வளவு ஸாதகம் என்பதை கவனிப்போம்

தன்கையே தனக்குதவி என்பதை இந்திய ஸகோதரிகள்

தெரிந்துகொண்டு விட்டார்களாம் இதனல் இதுகாறும் யாருடைய கையையோ எதிர்பார்த்திருந்ததாயும் அதனல் பல வழிகளில் மோசம்போய்விட்டார்களென்றும இப்போதுதான் விழித்துக்கொண்டார்களென்றும் கூறுவதாய் ஆயிற்று. இந்திய சகோதரிகள்பண்டைகாலம்தொட்டே அவர்கள்யாருடையகையை எதிர்பார்த்திருந்தார்கள் என்று பார்த்தால் இதற்கு நம் சிறுவனும் பதிற் கூறிவிடுவான். அவர்கள் கையை யாருக்குப் பிடிக்கக் கொடுத்தார்களோ அவர்கள்து கையைத்தான் அதாவது மதச் சடங்கு மூலம் பெரியோர்களின் ஸபையிலும் அக்னி பகவானின் முன்னிலையிலும் பாணிக்ரஹணம் செய்துகொண்ட கணவனின் கையைத்தான் எதிர்பார்த்திருந்தார்கள் இப்போதும் அவ்விதமே இருக்கிறார்கள் இனி எவ்விதம் இருக்குமோவென்பது தான் சந்தேகம் இவ்விதமிருக்க தன் கணவனை எதிர்பார்க்கிறதில்லையென்றும் தாங்களே ஸ்வதந்திரமாயோ அல்லது பரபுருஷனுடையவோ உதவியால் காரியம் செய்துகொள்வதாயும் அதுதான் உத்தமமென்றும் அதுதான் லோகக்ஷேமமென்றும் ஆனந்தக் களிப்படைகிறது இதுவா உத்தமம் இந்த உத்தமத்திற்கு சீதை, தமயந்தி, ஸாவித்ரீ போன்ற உத்தமிகள் பிறந்த மண்ணில்பிறந்தவர்களாகையால் அவர்களைப்போல் மேன்மையடையப் பார்க்கிறார்களென்றும் மகிழ்கிறது. ஒன்று கேட்கிறேன்.

पुण्यस्य फलमिच्छन्ति पुण्यं नेच्छन्ति मानवाः ।
न पापफलमिच्छन्ति पापं कुर्वन्ति यत्नतः ॥

𑌪𑍁𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌫𑌲𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌨𑍇𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ।
𑌨 𑌪𑌾𑌪𑌫𑌲𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌪𑌾𑌪𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ॥

புண்ணியத்தின் பலன் வேண்டுமென்று விரும்புகின்றனர். புண்ணியம் செய்ய விரும்புகிறதில்லை பாபத்தின் பலனை அடையவேகூடாதென்று எண்ணுகின்றனர், பாபத்தையே மிக ஊக்கத்துடன் கையாளுகின்றனர் என்ற முதுமை மொழிக்கு இதுதான் காலமென்று யாவருக்கும் எளிதில் விளங்கும். பாருங்கள் சீதை தமயந்தி ஸாவித்ரீ போல் மேன்மை அடையவேண்டுமாம். அவர்கள் செய்த செய்கையை அனுஷ்டிக்கிறதில்லையென்பதோடு நில்லாமல் அவர்கள் வெறுத்த அனீதியான கார்யத்தையும் செய்கிறதாம் ஸீதை முதலியவர்கள் அடைந்த பலன் கிடைத்துவிடுமாம்.

இதை யாராவது ஏற்பாரா தன்கையே தனக்குதவி என்றுஸ்வப் பனத்திலாவது அவர்கள் நினைத்திருக்கக்கூடுமென்று புராணகதை களால் பிரமாணத்துடன் நிரூபிக்க முடியுமா இவ்விதம்கூறி ஏமாற் றும்இவர்களதுவாக்குக்குஇவர்களதுகூற்றே பிரமாணம் ஒருகால த்திலும்ஸீதை முதலியவர்கள் புருஷனின்றிஸ்வதந்திரமாய்இருக்க வே இல்லை தனிமையாய் இருக்கும்படி நேர்ந்த கஷ்டகாலத்தில் வேறுதைவத்தைக்கூட மனதில் நினையாமல் கணவனையே தியானி த்து பாதிவிருத்தியத்தின்மகிமையாலே ஸித்திபெற்றனர் பத்திராதி பர் எழுதும் தன்கையே தனக்குதவி என்பதை ஹிந்துமதத்தார் ஸ்திரீகள் விஷயத்தில் ஏற்கவே மாட்டார்கள்.

தவிற ஸ்திரீகள் மகாநாடு என்பது ஒருபோதும் கிடையாது அவர்கள் கூடி யோசிக்கவேண்டிய ஸந்தர்ப்பம் என்றைக்குமே இல்லை அவர்கள் சபை கூடுவதோ, அல்லது அச்சபைக்குப்போவ தோ அது லோகத்திற்கு அனர்த்த சூசகம் அவர்களுக்கும் நாச த்திற்கு ஏதுவென்று வாத்ஸ்யாயனர்

**अतिगोष्ठी निरंकुशत्वं भर्तुः स्वैरता पुरुषैस्सहानियन्त्रणता प्रवासेऽवस्थानं विदेशे निवासः स्ववृत्त्युपघातः स्वैरिणीसंसर्गः पत्युरीर्ष्यालुता-चेति स्त्रीणां सन्ति विनाशकारणानि ॥**

𑌅𑌤𑌿𑌗𑍋𑌷𑍍𑌠𑍀, 𑌨𑌿𑌰𑌂𑌕𑍁𑌶𑌤𑍍𑌵𑌂, 𑌭𑌰𑍍𑌤𑍁𑌃 𑌸𑍍𑌵𑍈𑌰𑌤𑌾, 𑌪𑍁𑌰𑍁𑌷𑍈𑌸𑍍𑌸𑌹𑌾𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌣𑌤𑌾, 𑌪𑍍𑌰𑌵𑌾𑌸𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌵𑌿𑌦𑍇𑌶𑍇 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃, 𑌸𑍍𑌵𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌘𑌾𑌤𑌃, 𑌸𑍍𑌵𑍈𑌰𑌿𑌣𑍀𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌃 𑌪𑌤𑍍𑌯𑍁𑌰𑍀𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌲𑍁𑌤𑌾𑌚𑍇𑌤𑌿 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌨𑌾𑌶𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌿 ॥

கோஷ்டிசேர்தல் அடக்குதலற்றிருப்பது புருஷனைவிட்டுத் தோ ன்றியவாறு தனி நடத்தை, புருஷர்களின் ஸஹவாஸம், வேறூர் செல்லுதல், தேசாந்திரவாஸம் செய்தல், தன் விருத்தியைக் கெடு த்தல், வியபசாரிகளுடன் கூடி நேசித்தல் பதியினிடம் அசூயை கொள்ளல் என்பன ஸ்திரீகளின் நாசகாரணங்கள் என்று கூறுகி ன்றனர்.

(தொடரும்)

M N சுப்பிரமணிய சாஸ்திரிகள்,

125

# சென்னை வர்ணாச்ரம தர்ம மஹாநாட்டின் விஷயமும் ஸ்ரீமான் சோமதேவசர்மாவும்.

ஷை கமிட்டி காரியதரிசி ஸ்ரீமான் யூ. பி. கிருஷ்ணமாசாரியார் எழுதுகிறார்

நான் ஆகஸ்ட்டு மீ காசியிலிருந்து சென்னை வந்து சேர்ந்தேன் அப்பொழுது ஸ்ரீமான் சோமதேவசர்மா ஷை மஹாநாடு நடத்த வேண்டி சில இடங்களில் அலைந்து திரிந்து வந்தார் என்றும் பத்திரிகைகளில் பிரசுரித்து வந்தார் என்றும் என்னுடைய நண்பர்கள் சொன்னார்கள். இவரும் எனக்கு வெகுநாளாகத்தெரிந்தவர். தஞ்சையில் நடந்த மஹாநாட்டில்என்னைக் காரியதரிசியாக நியமித்திருந்ததால் சென்னையிலும் மற்ற இடங்களிலிருந்தும் சிலர் நான் இந்த மஹாநாட்டை நிர்வஹித்து நடத்த வேண்டுமென்று நேரிலும் பத்திரிகை மூலமாகவும் கடிதங்கள் மூலமாயும் கேட்டுக்கொண்டார்கள். அந்தக் கடமையை சிரஸாக வஹித்து அடியேனும் சுதேசமித்திரன் பத்திரிகையில் இந்த உத்தேசத்தைக் குறிப்பிட்டு என் இருப்பிடத்தையும்தெரிவித்தேன். எனது நண்பர் ஸ்ரீமான் சோமதேவசர்மா, நான் வந்து 2-மாத காலமாகஎனக்கு மஹாநாட்டின் விஷயமாகக் கடிதத்திலாவது, நேரிலாவது ஒன்றும் சொல்லவில்லை. நானும் ஏதோ தர்மகாரியம் நடந்தால் போதுமென்றுஎனக்குப்பகவானால்நியமிக்கப்பட்ட சாதாரண ப்ரசாரத்தைச் செய்துவந்தேன் இதின்மத்தியில்திருவநந்தபுரம் திவான்பேஷ்கார் ப்ரம்மஸ்ரீ என். சுப்பிரமணிய அய்யர் ப்ரேரேபணையின் பேரில் என்னுடைய போஷகர்களான மதுரை பிரம்மஸ்ரீ என். நடேச அய்யர், ஆர். கணபதி அய்யர், என். ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்கார் ஆகிய இவர்கள் தாங்கள்செய்திருந்த தீர்மானத்தை எனக்குத் தெரிவித்து சோமதேவசர்மாவுக்கு என்னுடன் கலந்து உழைக்கும்படியாக எழுதியிருப்பதாகவும், தங்சைத்தீர்மானத்தின்படி நான் இந்தக் காரியத்தை நிர்வஹித்து நடத்த வேண்டுமென்றும் ஆக்ஞாபித்து எழுதினார்கள். ஸ்ரீமான் என். ஆர் கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்கள் சென்னையில் என்னிடம் நேரிலும் வந்து பேசினபோது பிரம்மஸ்ரீ சோமதேவசர்மா என்னைக் காணவில்லையென்றும் அவர் இருப்பிடம் எனக்குத் தெரியாதென்றும் இவ்வாறு தனிப்பிரவர்த்திகள் நடக்கும் காலே

யில் என்னுடைய சங்கம் மனஸ்தாபத்துக்கு இடம் தரும் என்றும் சொன்னேன். எப்படியிருந்தாலும் நிர்வஹித்து நடத்தும்படி வற்புறுத்திச் சொல்லிப்போனார்.

இப்படி இருந்தபொழுது ஸ்ரீமான் எம் கே ஆச்சாரியாரும் ஹரித்வாரம், மாதவ தீர்த்தரும் நேரில் கண்டு தாங்கள் நடத்தப் போகும் ஸநாதனதர்ம மகாநாட்டில் நான் முக்கியமாக இருந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள் அவர்களிடத்தும் கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி நான் இந்த விஷயத்தில் என்னை விலக்கி விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டேன்

மறுபடியும் எனது மதுரை நண்பர்கள் உறுத்தியெழுதின பொழுதுஇந்தக் கார்யத்தை பகவான்நியமனம் என்றும் எண்ணி பிரசாரவிஷயத்தில் எனக்கு குருவாக இருந்துவரும் காஞ்சீகாமகோடிபீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யஸ்வாமி அவர்களுக்கு விஞ்ஞாபனம் செய்ததின்பேரில் அவர் சோமதேவசர்மாவுக்கு எழுதியதாகவும் என்னுடன் அவர் கலந்து உழைக்கும் பக்ஷத்தில் நியமிக்கப்படும் பொக்கிஷதாருக்கு நேரில், அனுக்கிரக ரூபமான ரூ 100—0—0 அனுப்பப்படும் என்றும் ஸ்ரீமுகம் பிரஸாதித்தார் இந்த ஸ்ரீமுகம் கிடைத்தபிறகு சுமார் 15-நாளாக சோமதேவசர்மாவைக் காணவில்லை

திருவல்லிக்கேணியில் கங்கைகொண்டான் மண்டபத்தில் வெகுநாளாக நடந்துவந்த என்னுடைய ஸநாதனதர்மப்பிரசங்க நாட்களில் ஒருநாள் கூட்டத்தில் என்னைக்கண்டு விஷயங்களைச் சொன்னார்

எனக்குத் தெரிந்தவரையில் இவர் ரசீது புஸ்தகங்கள் அச்சிட்டு வைத்துக்கொண்டு சில மாதங்களாக மகாநாடு விஷயமாகப் பணம் வசூல் செய்து வந்தார் என்னிடம் ரசீது புஸ்தகத்தையும் காண்பித்தார் எவ்வளவு வசூல் என்று கேட்டபொழுது வண்டிச் சிலவுக்குக்கூட அகப்படவில்லையென்றும், என்னுடையச்ரமமெல்லாம் வியர்த்தமாகிறதென்றும் சொன்னார் முக்கியமானபிரகடனங்களுக்காக அச்சுக் கூலிக்கு என்ன செய்யலாமென்று கேட்டபொழுது தான் அந்த விஷயத்தில் அசக்தனென்றும் தெரிவித்தார் உபசரணைக் கமிட்டி ஏற்பாடு செய்வதற்குத்தான் கூட்டங்கள் கூட்டினதாய் பத்திரிகைகளில் வந்த குறிப்புகளின் பிரயோஜனமென்னவென்று கேட்டதற்கு பத்திரிகை பிரசுரத்

திற்கு மட்டும் பிரயோஜனமாகுமே தவிற பண விஷபத்தில்யாதொரு பிரயோஜனமுமில்லையென்று சொன்னார் பண்டிதமண்டலிக்கு விக்ஞாபனப் பத்திரம் அனுப்பப்பட்டதா வென்றதற்கு சிற்சில பண்டிதருக்கு தனிக்கடிதங்கள் யெழுதினது தவிறவேறு எவ்விதக்காரியங்களும்நடக்கவில்லையென்றார் இது சோமதேவ சர்மா வர்ணாச்ரம தர்மமகாநாட்டின் 4-மாதப்பிரசாரம்

கெங்கைகொண்டான் மண்டபத்தில் என்னைக்கண்டு இது விஷயங்களைச் சொல்லியபொழுது ஆசாரியஸ்வாமியின் நியமனத்தை மனதில் வைத்துக்கொண்டு மறுநாள் என்னுடைய உபன்னியாசத்தின் முடிவில் உபசாரணைக்கமிட்டி ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி இவரை அனுப்பினேன். மறுநாளும் உபன்னியாஸத்தின் முடிவில் இவர் வந்துசேர்ந்தார். ஜனங்கள் கலைந்த பிறகு முக்கியமானவர்களை வைத்துக்கொண்டு கமிட்டி ஏற்பாடாயிற்று. கமிட்டியில் நின்ற வ்யக்திகளில் சோமதேவசர்மாவுக்கு ஒருவரையும் நேரில் தெரியாது; தனக்குத் தெரிந்தவர் ஒருவர் வேண்டுமென்று எண்ணி ஸ்ரீமான் கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் அவர்களை உபத்தலைவராகவாவது செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டதின்பேரில் அவ்வாறே செய்தோம். ஸ்ரீமான் கயப்பாக்கம் செட்டியார் அவர்கள் மஹாநாடு நடந்த தினங்களில் சபையில் விஜயம் செய்திருந்தாரேதவிற உபசாரணைக் கமிட்டியின் பிரசாரங்களில் கலந்திருந்து ஏதேனும் ஒன்றாவது செய்ததாகத் தெரியவில்லை.

இதுதான் சோமதேவசர்மாவின் பொறுப்பில் நான் பங்கிட்டுக்கொண்டதாம்.

கமிட்டி ஏற்பாடானபிறகு இவர் செய்த காரியங்கள்:—

பள்ளிக்கூடத்தில் தான் உபாத்தியாயாயிருந்துவருவதால் தினமும் கமிட்டி ஆபீசுக்குத்தான் வரமுடியவில்லை என்று சொன்னார். ஆகையால் என்னுடைய சிலவில் முக்கியமான பிரகடனப் பத்திரங்கள் அச்சிட்டு வைதிகவித்வாம்ஸாளுக்குமட்டும் ப்ரார்தனாபத்திரங்களை இவரிடம் கவர்களுடன் கொடுத்து விலாசங்கள் எழுதிவரும்படியாகக் கேட்டுக்கொண்டேன். அப்படியே இவர் யெழுதின விலாசங்கள் 94; பண்டிதர்களின் ஜாப்தாவோ 119. இந்த 94-விலாசங்களை யெழுதி சௌகர்யம் இருந்த நாளில்வந்து என்னிடம்கொடுத்துச் சென்றார். ஸ்டாம்பு சிலவை

என் கையைவிட்டுப்போட்டு அவைகளை நான் அனுப்பினேன்; இவர் செய்த 2-வது வேலையானது வெளியே இருந்துவந்த தமிழ் கடிதங்களை ஒருதினம் படித்து அவைகளிலிருந்த தீர்மானங்களையும் பிரதிநிதிகளின் பேர்களையும் எடுத்து ஒரு ஜாப்தாக் கொடுத்தார். இது 10-ஊர்களின் செய்திதான்.

இதனிடையில் ஆசாரியஸ்வாமிகள் அனுக்கிரகரூபமான ரூ. 100—0—0 பொக்கிஷதாரரான ஸ்ரீமான் அனந்தாழ்வார் அவர்களுக்கு நேரில் வந்தது. மஹாநாடு நடைபெறவேண்டிய நாளோ 15-நாள்கூட இல்லை. இந்த ரூபாய் நூறு த்விர மேலே வேண்டிய தொகை எங்கிருந்து கிடைக்குமோ என்கிறது ஸோம தேவசர்மாவின் கவலையில்லை. இவரைக்காண்பதே துர்லபமாக இருந்தது.

பணத்துக்கு சிரமப்பட்டுக்கொண்டிருந்தபோது ஒருநாள் ஸோமதேவசர்மா "அனந்தாவ்" பொக்கிஷதார் வர்ணாச்ரம மஹாநாடு என்று விலாஸமிட்டு திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து ரூ. 4—0—0 தன் வீட்டுக்கு வந்ததென்றும் "அனந்தாழ்வார்" என்று குறிப்பிட்டு திருவல்லிக்கேணிக்கு அனுப்பினதாகவும் சொன்னார். இந்த நான்கு ரூபாயாவது இவர் சிபார்சினால் வந்ததாகுமோ? எப்படியிருப்பினும் அதுவும் பொக்கிஷதாரருக்குக் கிடைக்கவில்லை. இதைத்தவிற பொக்கிஷதாரருக்குக் கிடைத்த தொகைகளில் ஸோமதேவசர்மா ஸம்பந்தம் எதிலுமில்லை; இது உண்மையான சமாசாரம். மேலும் இவர்தான் வசூல்செய்ததாகத் தானே ஒப்புக்கொண்ட ரூ. (20) இருபதுக்கும் கமிட்டிக்குக் கணக்கும் கொடுக்கவில்லை. இவர் தன் கையைவிட்டு ரூ. 4—4—0 செலவழித்ததற்கும் கமிட்டியிடம் தகவல் கொடுக்கவில்லை. மஹாநாடு நடந்த 3-தினம் கழித்தபிறகு எதோவெளியூரிலிருந்து ஒருகடிதம் எழுதினார். எப்பொழுதும்போல நேரில் கண்டுசொல்ல அவகாசம் இல்லை; தான்ரூ 20வசூல்செய்ததாகவும் மேலேயே ரூ 4—4—0 செலவழித்ததாகவும் இதை நாங்கள் தயார்செய்யப்போகும் கணக்கு ஜாப்தாவில் குறித்துக்காட்ட வேண்டுமென்றும் அப்படிக்காட்டத்தவறினால் தன்னை மஹாஜனங்கள் ஸந்தேஹிப்பார்கள் என்றும் எழுதினார். இதை உபசரணைக்கமிட்டியின் மற்ற அங்கத்தினர்களிடம் வாசா பிரஸ்தாபித்தபொழுது இவர் ஸரிவர கணக்குக் கொடுக்காததால் இதை

ரிகார்டில் சேர்ப்பது நியாயவிருத்தமாகுமென்று சொன்னதின் பேரில் நான் அந்த பிரஸ்தாபத்தையே விட்டுவிட்டேன்.

இவர் "ஆர்யதர்மம்" பத்திரிகையில் 16—2—28 ஸஞ்சிகையில் எங்கள் கணக்கைப் பிரசுரிக்க எவ்வாறு துணிந்தனரோ தெரியவில்லை. இவர் என்னிடமிருந்து சுமார் ஒருமாதகாலம் முந்தியதாகவே தங்களைப்போன்ற முக்கியமான இடங்களுக்கு அனுப்பிவைத்து, எனக்கு உபகாரம்செய்வதாகச்சொல்லி இரண்டு டஜன் அச்சிட்ட ரிபோர்ட்டுகளையும் எடுத்துச்சென்றார். அதில் கமிட்டியார். கடைசியாக அங்கீகரித்துள்ள கணக்கு விவஹாரத்தை 10, 11-வது பக்கங்களில் கண்டிருக்கிறேன். அதைக்காணாதவர்போல தாறுமாறான கணக்கைப் பிரசுரம்செய்தார். அந்தோ! தன் பெயரை அதில் காணாததால் கோபங்கொண்டனரோ தெரியவில்லை காணாததின்காரணம் அவரேதெரிந்துகொண்டிருக்கலாம்

ஸ்ரீ அஹோபிலமடத்துஸ்வாமி ரூ50 யாருக்குஅனுப்பினார்? அது எங்களுக்கு வரவில்லையே. பூர்ணகிருபையுடன் ஸ்ரீதோதாத்ரிஸ்வாமி எங்கள் பிரவர்த்தியில் கிருபைசெய்துள்ள ரூ (75) எழுபத்தைந்தை ஸோமதேவசர்மா என் மறந்தார்? எங்கள் பொக்கிஷதார் அதைவாங்கி ஸபைவிஷயமாகச்செலவழித்துவிட்டாரென்றுதானே? நமது மதுரை நண்பர் என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் மதுரை மஹாஜனங்களிடமிருந்து வசூல்செய்ததுகையை ஸோமதேவசர்மாவுக்குத்தானே கொடுத்தார்? துகை கொடுத்திருந்தால் ஸரியாகக் குறிப்பிடவேண்டாமா? அவர்களிடமிருந்து நமக்குக்கிடைத்த ரூ 107—0—0. இவர் கண்டிருக்கும் ரூ 200ல் பாக்கி ரூ 93ம் ஸோமதேவசர்மாவிடம் உளதோ!

ஸகல வரவுகளையும் காட்டி மேல்கண்ட சிலவு நூறு ரூபாய் என்று குறித்திருக்கிறார். மேல்கொண்ட சிலவு இதற்குக் குறைவு என்று நான் காட்டியிருக்கும்போது ஸபையாருக்குலாபமன்றோ? வாஸ்துவமாக அவ்விதம் மேல்போன சிலவு 27—1—7. இதை கனம் ராவ்பஹதூர் ஸ்ரீமான் ரங்கனாதம்செட்டியார் அவர்கள் கிருபைகூர்ந்து கொடுத்து என்னைக் காப்பாற்றினார். அந்தோ! ஷை 93ல் இந்த ரூ 27—1—7 கொடுத்துவிட்டால் போதும். பாக்கித் துகை ரூ 65—14—5ம் ஸ்ரீ அஹோபிலமடம் ரூ 50 ஆக துகை ரூ. 115—14—5ம் அவரிடமே அடுத்தவருஷம் மதுரையில்நடக்கப்போகும் மகாநாட்டிற்கு மூலதனமாகவிருக்கலாம்.

மஹாநாடு 4ம் நாள் காலையில் இவர் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து வித்வான்களுக்குச்சிலவுகொடுத்து அனுப்பினர் என்றார். அது வாஸ்தவம். ஆறுமாதகாலமாகப்பிரசாரம்செய்து பார்த்த இவருக்கு இந்தப்பிரதிஷ்டை வேண்டுமென்றே விலகி நின்றேன். பணத்தை எண்ணிக்கொடுத்தவரான காரியதரிசியையும் அவர் நண்பரையும், ஓடியாடிவரும் சர்மாஅவர்களின் கையில் பேரைச்சொல்லி ஒப்பிவித்த அக்கிராஸனாதிபதி ஸ்ரீ-உப-வே· ஸ்ரீநிவாஸாசாரியார் அவரையும் இவர் ஸாமர்த்தியமாக மறந்தார். பண்டிதர்களுக்குக் கொடுக்கவேண்டிய துகை 3-வது நாள் மாலையில் எவ்வளவு இருந்ததென்று தெரியுமோ? ரூ 150 இருந்தால் போதுமென்று எண்ணினபோது பொக்கிஷதார் கையில் 70 அல்லது 80 கூட இல்லாமலிருந்தது. பகவானுடையகிருபைமேலிட்டு ஓர் வைஷ்ணவபக்தர் 4மணிசுமாருக்கு வலுவில் ரூ 100 காரியதரிசியான என்னைக் கூட்டத்தினின்று வெளியே அழைத்து நீர் இனிமேல் இந்த அவமானம் விளையும்படியானநஷ்டங்களுக்கு அகப்பட்டுக்கொள்ளவேண்டாம் என்று சொல்லி துகையும் என்னிடம் கொடுத்துச் சென்றார். இவர் யாரென்று சர்மா அவர்களுக்குத் தெரியுமா ?

இவர் சொல்லும் கணக்கை "காரியதரிசி அல்லது பொக்கிஷதார் திருத்தட்டும்" என்று உதாஸீன வார்த்தையை எழுதியிருக்கிறார். இரண்டு அல்லது மூன்று ரூபாய் விஷயமானல் திருத்துவது ஸாத்தியம்; திருத்துவது அழகு. மஹாநாடு நடந்த வாலாறே இன்னதென்று தெரியாத ஸ்ரீமான் ஸோமதேவசர்மா அஸம்பாவிதமான காரியத்தில் இறங்கினதைப்பற்றி வருத்தப்படுகிறேன். என்னிடம் வாங்கிப்போன ரிபோர்ட்டுகளிலிருந்துஇவர்கணக்கை உள்ளபடியே பிரசுரம் செய்திருந்தால் இவர் பிரதிஷ்டைக்குமழகு கமிட்டிக்கும் கௌரவம். பரிஷத்காரியதரிசியான இவருக்குவரவு சிலவு நிர்வாககார்யத்தில் பிரவேசம் எவ்வாறு ஒவ்வும்?

இனி நம்முடைய வர்ணாச்ரமதர்மத்தைச் சரிவர பிரவசனம் செய்யவேண்டுமென்றால் ஸ்வப்பிரதிஷ்டை அபிலாஷையிருந்த போதிலும், நாமும் ஸரியான வழியில் பொதுநோக்கம் இன்னதென்று தெரிந்துகொண்டு ஒத்துழைத்தல்வேண்டும். மனஸ்தாபத்தை உண்டுபண்ணக்கூடியதான அனுசாரமான அவ்வியவஸ்தையுள்ள வியாஸங்களையும் குறிப்புகளையும் மறந்துவிடவேண்டும்.

U,P, Krishuamacharya,
Secretary, V, D, C, Standing Committee

தில்லை " என்ற பிரதிக்ஞைக்கு விரோதமாயிருப்பதாலும் மிகப்பல மாகக் கண்டிக்கிறது.

(2) ஷை மசோதா சாஸ்திர விரோதமானதென்றும், மதத்தைப் பாதிக்கக்கூடியதென்றும், விளக்கிக்காட்ட ஸ்ரீ ஜகத் குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் ஆக்ஞைப்படி ஓர் பிரதிநிதியை (மகா-ள-ள-ஸ்ரீ என். ஸ்ரீநிவாஸா சாரி ஸ்வாமிகள் பி. ஏ. பி. எல். அகில இந்திய வர்ணாச்ரமஸபை தலைவரை) தேர்ந்தெடுத்து மாக்ஷிமை தங்கிய சென்னை கவர்னரிட மும் கனம் ராஜப்பிரதிநிதியிடமும் தூது அனுப்பத் தீர்மானிக் கிறது.

(3) எங்களது தூதை ஏற்று ஷை மசோதாவை ஸபையில் வாதத்திற்கே வாராதபடி நிராகரிக்கும்படியும் கனம் ராஜப்பிரதி நிதியை வேண்டுகிறது.

(4) ஷை தீர்மானங்களை கனம் ராஜப்பிரதிநிதிக்கனுப்பவும் மெமோரியலில் கையெழுத்துகள் வாங்கியனுப்பவும் அக்ராஸன ருக்கு அதிகாரமளிக்கிறது.

(5) இம்மஹாஸபை ஷை மசோதாக்கள் இந்துதர்மம் மதங்களுக்கு விரோதமாயிருப்பதால் இதை (சட்டஸபையில் வாதத்திற்கு வருமானால்) எதிர்க்கும்படி எங்கள் பிரதிநிதியான சென்னை சட்டஸபை 4-அங்கத்தவர்களையும் சென்னை பிரதிநிதி யான அஸெம்ப்ளி மெம்பரையும் வேண்டுகிறது.

(6) லோகக்ஷேமத்திற்கு எல்லா வகையிலும் தர்மப்பிரசா ரம் செய்து அனுக்ரஹம் புரியும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளது பாதாரவிந்தங் களுக்கு இச்சபையின் பக்திச்ரத்தையுடன் கூடிய, ஸாஷ்டாங்க வந்தனத்தையும் ஸ்ரீ குருபாத பக்தியையும் விநயமாக விக்ஞா பனம் செய்துகொள்ளுகின்றது.

இக்கூட்டத்திற்கெனப் போடப்பட்ட பந்தலும் நாட்டியக் கொடிகளும், விவாஹம் போகத்திற்குமட்டுமல்ல, பிறப்புமிறப் பும் தைவச்செயல், என்பதுபோன்ற பல தர்மவாக்யங்களும் கண்ணைக் கவர்ந்தனும். அங்கே பல கையெழுத்துகள் வாங்கி மஹஜர் அனுப்பப்பட்டது, இச்சபையைக்கண்ணால் கண்டு மதாபி மானிகளின் தீர்மானப்படி நடக்கும்படி அழைக்கப்பட்ட டாக் டர் முத்துலக்ஷ்மி தானும் தன்னைச் சார்ந்தவர்களும் பேச இட

மளித்தால் வருவதாகக்கூற அது அனுமதிக்கப்படவில்லை பெண் மக்களும் லௌகிகர்களும் மாணவர்களும் குழுமி இதை உத்ஸாஹத்துடன் கவனித்தது நமக்குள்ள பூர்ணபலத்தைக் காட்டுகிறது. உண்மைப் பிரதிநிதியான ஸ்ரீ கோவிந்தராஜமுதலியார் எம். எல். ஸி. அவர்கள் வந்து தன் கடமையைச் செய்ததைக் காண எல்லோரும் ஸந்தோஷித்தனர். இவ்வளவு வைபவத்திற்கும் ஸ்ரீமதாசாரியானுக்ரஹமே காரணம். ஸ்ரீமதாசாரியஸ்வாமிகள் ஆக்ஞையை சிரஸால் வஹித்து இதேபோல் செங்கல்பட்டு, நார்த் ஆற்காடு, சித்தூர் இம்மூன்று ஜில்லாக்களிலும் ஸ்ரீ ஸோமதேவசர்மா சிக்கிரம் மஹாநாட்டைக் கூட்டுவார். மதாபிமானிகள் ஸஹாயம் புரியவேண்டுகிறேன். கிருஷ்ணமூர்த்திசாஸ்திரி.

## ஸநாதநதர்ம்ம ஸம்வர்த்தினீ ஸபை

### பர்ளையப்பட்டி.

புதுக்கோட்டை ஸமஸ்தானம் திருமயம் தாலூக்கா பளையப்பட்டி கிராமததில் ஜகத்குரு பிர்ம்மஸ்ரீ சங்கரபகவத்பாதாளின் திருவருளை முன்னிட்டு பிரபவஹு ஐப்பிசிமீ 27உ. முதல் "ஸமீபக்கிராமங்களான 'நச்சாந்துப்பட்டி' குழிபிரை விரயாச்சிலை என்ற மூன்று கிராமங்களின் மஹாஜனங்களுடன் ஸனாதந தர்ம்ம ஸம்வர்த்தனீ என்ற ஸபை ஸ்தாபனஞ் செய்யப்பெற்று நடைபெறுகின்றது. இதில் மாதம் இருமுறை அதாவது பாக்ஷிகஸபையாக பௌர்ணிமையிலும் அமாவாஸ்யையிலும் ஸபை நடந்து அரிய பெரிய அறிஞர்களைக்கொண்டு ஸநாதந தர்ம்ம ஸம்மந்தமான விஷயங்களைப்பற்றியும் விவாஹமசோதா மறுப்பினைப்பற்றியும் தலைசிறந்த உபந்நியாஸங்கள் நிகழ்ந்து விவாஹமசோதா மறுப்பு மஹஸரும் மஹா-ள-ள-ஸ்ரீ மெட்ருஸ் கவர்னர் அவர்களுக்கும் மகா-ள-ஸ்ரீ வைஸ்ராய் அவர்களுக்கும் அனுப்பப் பெற்றிருக்கின்றது. இம்முறையாகவே நிகழும் மாசிமீ 25உ (8-3-28) குருவாரம் பிற்பகல் 3-மணிக்கு வழக்கம்போல் ஸபை கூடியது. அதில் திருகோகர்ணம் ஸம்ஸ்க்ருத வித்வான் பிரம்மஸ்ரீ T. N. இராமச்சந்திரசாஸ்திரிகளவர்கள் 'ஸநாதனதர்மம்' என்ற விஷயத்தைச்சிறந்த தர்ம சாஸ்திரங்களின் மேற்கோள்களாலும் ஸ்ரீசங்கரசரித்திர வாயிலாகவும் இனிய தமிழ் நடையால் உபன்னியா

ஸம் செய்தும் விவாஹமசோதாகண்டனத்தை சாஸ்திரீயமாகவும் ஸயுக்திகமாகவும் பேசியும் கேட்பவர் மனதை மகிழ்வித்தனர். அங்கு குழுமியிருந்த ஆண் பெண் பாலரனைவரும் மாலை 6-மணி வரை பொறுமையுடனிருந்து சிரவணம் செய்து ஸ்ரீமதாசாரிய பகவத்பாதாளின் தீபாராதனையைத் தெரிசனஞ் செய்து களித்தனர். ஸபையும் மங்களகரமாகவே இனிது நிறைவேறியது.

"ஸநாதந தர்ம்ம ஸபையும்—பார்மிசை
சங்கர னருளாற் பொங்கிடும் நிதமே  சுபம்!

நாராயணஸாமி அய்யர்.

ஸ்ரீ ஸத்குரு பரப்ரம்மணே நம:

## ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவப்பத்திரிகை.

கலௌயுகே கல்மஷமானஸானும் நான் யத்திர தர்ம:கலுநிச்சயேன
ராமேதிவர்ண த்வயமாதரேண பும்ஸோஷ்ணவேத் தாபதவார்ஜி தஸ்ய

இப்பாத கண்டத்துக்குத்திலகம்போல்விளங்கிவருகிற புந்நாகவனமென்னும் திவ்யக்ஷேத்திரமாகிய நாகூரில் பெருமாள்கோவில் மேலவீதி மேல அக்கிரஹாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பஜனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்ற சாக்ஷாத் ஸ்ரீ வைகுண்ட நிலயவாசியாயும் இம்மையில் தர்மார்த்த காமியங்களையும் மறுமையில் மோக்ஷஸாம்ராஜ்யத்தையும் கொடுக்கப்பட்டவராயுமான திருமூர்த்திகளும் ஓர் வடிவாகிய ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு நாளது பிரபவ-ஷு பங்குனி-மீ 16உக்கு (28-3-28) முதல் 20உக்கு(1-4-28)வரையில் ஸ்ரீ ராமச்சந்திரஸ்வாமி அவதார ஸ்ரீராமநவமி மகோத்ஸவத்தை பகவத்கிருபையை முன்னிட்டு நடத்துவதாய் நிச்சயித்திருப்பதால் ஷெ உத்ஸவத்திற்கும் இரவில் மகான்களான அநேகம் ஸாதுக்களால் செய்யப்படும் பகவத் பஜனங்களுக்கும் கீர்த்தன குணானுபவங்களுக்கும் சங்கீத கதா காலக்ஷேபங்களுக்கும் பக்த கோடிகள் தங்களிஷ்டமித்திர பந்து ஜனங்களுடன் வந்திருந்து பரமாத்மாவை தரிசித்துப் பதிபுண்யத்தைக் கைக்கொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் பிரீதிக்குரிய
பாகவத ஸமுதாயதாஸன்
**ராம. து. வீராசாமி அய்யர்.**

## விவாஹ வயது மசோதா கண்டனக் கூட்டம்.

### ஓமாம்புலியூர்.

இந்த பாடல் பெற்ற க்ஷேத்திரத்தில் 5-4-28 ல் மகோத்ஸவத்திற்காக சுற்றுப் புரங்களிலுள்ள 10-மயிலுக்குட்பட்ட ஸகல விஷ்ணு ஈசுவர மூர்த்திகளும் வடதிருக்காவேரியில் வந்து தீர்த்த வாரியும் உத்ஸவமும் கண்டருள்புரிந்தார்கள். அன்று மாலை 7 மணிமுதல் கூடியிருந்த பெருங்கூட்டத்தில் தென்னாற்காடு சேலம் ஜில்லாக்களுக்கு விவாக வயது மசோதா கண்டனப்ராசாரகரான ஸ்ரீமான் உமாமகேச்வர சாஸ்திரிகளால் தற்சமயம் சென்னையிலும்டில்லியிலும்கொண்டு வரப்பட்டிருக்கிற ஷை மசோதாக்களைக் கண்டித்தும் விவாகமென்பது ஹிந்துக்களுக்கு அஸ்திவாரமான தர்மத்துக்கு இன்றியமையாத ஆதாரமென்றும் அதைச்சட்டத்தினால் கட்டுப்படுத்தினால் தொண்டுதொட்டுக் கையாண்டுவருகிற நமது தர்மமும் மதமும் ஜாதியும் கெட்டுப்போய்விடுமென்றும் ஹிந்துக்களுக்கு ஊணிலும உடுப்பதிலும் பேசுவதிலும் பெயர் வைப்பதிலும் விருந்திலும் உத்ஸவத்திலும் தர்மமே ஊடுருவிச் சென்றிருக்கிறதென்றும் இவற்றுள் விவாகமே முக்கியமான தர்மஸாதனமென்றும் இதில்பிராமணேதரர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் உபந்யஸித்து இக்கண்டனத்தை ஷை ஸபைகளுக்கு அனுப்பும்படி தலைவருக்கு அதிகாரங்கொடுத்துச்சபை இனிது முடிந்தது.

வி உமாமகேசுவசாஸ்திரி

### திருநெல்வேலி ஜில்லா

1928ஞு மார்ச்சு-மீ 28உ திருநெல்வேலிஜில்லா நாரணம்பாள்புரம் கிராமத்தில் சாரதாவிலாஸினீ ஸம்ஸ்கிருத வித்யாசாலையில் மாலை 7-மணிக்கு விவாகவயது மசோதா கண்டன விஷயமாகக்கூடிய சபையில் சுமார் 200-ஜனங்கள் வந்திருந்தார்கள். ஷை ஸபைக்கு பிரஸிடெண்டாயிருந்த கோவாபிரேடிவ் பிரஸிடெண்டு மகா-ா-ஸ்ரீ மு. சங்கரய்யரவர்களிடம் ஷை ஸபா காரியதரிசியாயும் வித்யாசாலை பிரதம பண்டிதருமான கெ ஆர் குருஸ்வாமிசாஸ்திரியள் பின்ஷன் மாஜிஸ்டேட் ஸ்ரீநிவாசய்யங்கார் முதலான ஸகல ஜனங்களும ஏகாபிப்பிராயமாய் டாக்டர் முத்துலக்ஷ்மியின் விவாகவயதுமசோதாவை அழுத்தமாகக்கண்டித்து அதை ரத்து செய்யும்படி ஏற்பட்ட தீர்மானத்தை கனம் கவனர் ஜனராலுக்கும் சென்னைகவர்னருக்கும் அனுப்பும்படி பிரஸிடெண்டினிடம் அறிவிககப்பட்டு ஸபையும் முடிவுபெற்றது.

K, R குருஸ்வாமிசாஸ்திரியள்